www.Padasalai.Net திருப்பத்தூர் மாவட்டம் www.TrbTnpsc.com

காலாண்டுப் பொதுத் தேர்வு -2024-25

வகுப்பு : 12 பொருளியல் மதிப்பெண் : 90

விடைக்குறிப்புகள்

**I.** சரியான விடை:

| வ.எண் | விடைகள் | வ.எண் | விடைகள் |
|---|---|---|---|
| 1 | ஆ) ஜே.எம் கீன்ஸ் | **11.** | அ) ஜே.ஆர் ஹிக்ஸ் |
| 2. | ஆ) அமெரிக்கா | **12.** | இ) மும்பை |
| 3. | இ) நான்கு துறை மாதிரி | **13.** | அ) மைய பணவியல் அமைப்பு |
| 4. | ஈ) வருமானம் | **14.** | ஆ) சட்டப்படியான பண அளிப்பு |
| 5. | இ) **GDP** | **15.** | அ) பணவியல் |
| 6. | ஆ) பொருளாதார நலன் | **16.** | அ) 500 மற்றும் 1000 |
| 7. | இ) அங்காடி விதி | **17.** | ஆ) அயல்நாட்டுச் செலாவணி |
| 8. | ஈ) சேமிப்பு | **18.** | இ) அ மற்றும் ஆ |
| 9 | அ) 0.8 | **19.** | அ) தாள் தங்கம் |
| 10. | அ) 1 | **20.** | ஈ) சுங்கவரி ஒன்றியம் |

**II.** ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்

21. **பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.**
பேரியல் பொருளாதாரம் என்பது பொருளாதார அமைப்பு முழுமையையும் படிப்பது ஆகும்

22. **"வருமானத்தின் வட்ட ஓட்டம்" – வரையறு**
ஒரு பொருளாதார அமைப்பின் வருவாயின் வட்ட ஓட்டம் மாதிரியானது அந்த பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குவதாகும்

23. **GNP கணக்கிடும் சூத்திரத்தை எழுதுக.**
சந்தை விலையில் GNP = சந்தை விலையில் GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம்

24. **GDP குறைப்பான் இலக்கணம் தருக**
GDP குறைப்பான் என்பது GDP - யில் குறிப்பிட்டுள்ள பண்டங்கள் மற்றும் பணிகளின் விலை மாற்ற குறியீட்டெண் ஆகும்.

$$\text{GDP குறைப்பான்} = \frac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$$

25. **சே விதியின் எடுகாள்களை பட்டியலிடுக.**
முழு வேலை நிலை நிலவும்,
உழைப்பு மற்றும் பண்டங்களின் சந்தையில் நிறைவுப்போட்டி நிலவும்.

26. **சராசரி நுகர்வு நாட்டம் (APC) - வரையறு.**
வருமானத்திற்கும் நுகர்வுக்குமான வீதமே சராசரி நுகர்வு நாட்டமாகும்.

27. **நெகிழிப் பணம் என்றால் என்ன? உதாரணம் தருக.**
நெகிழிப் பணம் நடைமுறையிலுள்ள காகிதப் பணத்திற்கு ஒரு மாற்றாகும்.

28. **செலாவணி மாற்று வீதம் என்றால் என்ன?**
ஒரு அலகு அயல் பணத்தை பெறுவதற்கு எத்தனை அலகு உள்நாட்டுப் பணத்தை கொடுக்கிறோம் என்பதே செலாவணி மாற்று வீதமாகும்.

29. **எங்கு மற்றும் எப்பொழுது சார்க் தலைமை அலுவலகம் துவக்கப்பட்டது?**
நேபாள் தலைநகரம் காட்மண்டு இதன் தலைமைச் செயலகமாகக் கொண்டு ஜனவரி 16, 1987– ல் செயல்பட துவங்கியது

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

30. CRR மற்றும் SIR ஆகியவற்றினை வேறுபடுத்துக.

| | றொக்க இருப்பு விகிதம் (CRR) | சட்டபூர்வ நீர்மை விகிதம் (SLR) |
|---|---|---|
| | வணிக வங்கிகளிடம் வந்து சேரும் வைப்புகளில் மைய வங்கியில் இருப்பாக வைக்கவேண்டும். | தன்னகத்தே எப்பொழுதும் வைத்திருக்க வேண்டிய நீர்மை தன்மை கொண்ட சொத்துக்கள் ஆகும். |

**III.** ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்

31. **பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தை தருக.**

- ❖ நடப்புப் பிரச்சினைகளை அறிவியல் பூர்வ விசாரணை மூலம் அறிய பேரியல் பொருளாதாரம் வாய்ப்பளிக்கிறது.
- ❖ பொருளாதாரக் குறியீடுகளை பகுத்தாயவும் அவைகளை ஒப்பிடவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.
- ❖ பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காணவும், சரியான கொள்கைகளை உருவாக்கவும், முன்கணிக்கவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.


32. **தலைவீத வருமானம் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக.************

- ❖ தலைவீத வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும்.
- ❖ தேசிய வருமானத்தை மக்கள் தொகையால் வகுக்கக் கிடைப்பது தலா வருமானம்

33. **காரணி செலவில் NNP - விவரி.**

- ❖ காரணி செலவில் NNP என்பது உற்பத்தி காரணிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த வருமான செலுத்துதல் ஆகும்.
- ❖ காரணி செலவில் NNP = சந்தை விலையில் NNP - மறைமுகவரி + மானியம்

34.




---

35. **தொகு தேவை என்றால் என்ன? அதன் கூறுகளைக் கூறுக.**

**தொகு தேவை**

- ❖ ஒரு பொருளாதாரத்தின் தொகு தேவை தான் உற்பத்தியை நிர்ணயிக்கிறது.
- ❖ உழைப்பாளர்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பதால் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்று தொழில் முனைவோர்கள் எதிர்பார்க்கிறார்களோ அதுவே மொத்த தேவை எனலாம்.
- ❖ தொகுத் தேவை கூறுகள்

AD=C+1+G+X-M)

www.Padasalai.Net www.TrbTnpsc.com

தொகுத் தேவை நான்கு பகுதிகளைக் கொண்டது.

(i) நுகர்வுத் தேவை

(ii) முதலீட்டுத் தேவை

(iii) அரசுச் செலவு

(iii) நிகர ஏற்றுமதி

36. **தன்னிச்சையான முதலீடு மற்றும் தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக.**

| **வ.எண்** | **தன்னிச்சையான முதலீடு** | **தூண்டப்படுகிற முதலீடு** |
|---|---|---|
| 1. | தன்னிச்சையானது | திட்டமிடப்பட்டது |
| 2. | வருவாயைப் பொறுத்து நெகிழாதது | வருவாயைப் பொறுத்து நெகிழ்வது |
| 3. | நல நோக்கமுடையது | இலாப நோக்கமுடையது |

---

37. **பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?**

- ❖ ரொக்க வைப்பு விகிதம்
- ❖ ரொக்க இருப்பு வைப்பு விகிதம்
- ❖ ரொக்க இருப்பு விகிதம்
- ❖ சட்டபூர்வ நீர்மை விகிதம்

38. **நபார்டின் பணிகள் யாவை?**

- ❖ விவசாயம், சிறு தொழில்கள், குடிசை மற்றும் கிராமத் தொழில்கள், கைவினைத் தொழில்கள், மற்றும் மறுகடனை வழங்குகிறது.
- ❖ மாநில கூட்டுறவு வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள், நிலவள வங்கிகள் குறுகியகால, மத்தியகால மற்றும் நீண்டகால கடன்களை வழங்குகிறது.
- ❖ கூட்டுறவு கடன் வழங்கும் மாநில அரசுகளுக்கு 20 ஆண்டு நீண்டகால கடன்களை நபார்டு வங்கி வழங்குகிறது

39. **சார்க்கின் பணிகளை சுருக்கமாக கூறுக.**

- ❖ தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பை பராமரித்தல்.
- ❖ உறுப்பினார் நாடுகளின் பொதுவான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்.
- ❖ உறுப்பினார் நாடுகளிடையிலான உறவை மேம்படுத்துதல்.

40. கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் விடுபட்ட **MPS, MPS** மற்றும் **K** யின் மதிப்பை கணக்கிடுக.

| **MPC** | **MPS** | **K** |
|---|---|---|
| 0.00 | 1.00 | 1 |
| 0.10 | 0.90 | 1.11 |
| 0.50 | 0.50 | 2.00 |
| 0.75 | 0.25 | 4.00 |
| 0.90 | 0.10 | 10.00 |
| 1.00 | 0.00 | **α** |

Padasalai.Net

**III.** ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்

41. அ) **முதலாளித்துவ சமத்துவம், கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை ஒப்பிடுக.**

| வ. எண் | தன்மைகள் | முதலாளித்துவம் | சமத்துவம் | கலப்புத்துவம் |
|---|---|---|---|---|
| 1. | உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை | தனியார் மற்றும் பொது உரிமை |
| 2. | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் | சமூக நலன் மற்றும் இலாப நோக்கம் |
| 3. | மைய பிரச்சனைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | மத்திய திட்டமுறை | மத்திய திட்ட முறை மற்றும் தடையில்லா சந்தை |
| 4. | அரசின் பங்கு | உள்ளீடு கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு | குறைந்த பங்கு |
| 5. | வருவாய் பங்கீடு | சமனற்றநிலை | சமநிலை | குறைந்த சமநிலைபற்ற நிலை |
| 6. | நிறுவன தன்மை | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் | தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள் |
| 7. | பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை | கட்டுபாட்டுடன் சுதந்திரம் |
| 8. | முக்கிய பிரச்சனை | சமமின்மை | திறனின்மை | சமமின்மை மற்றும் திறனின்மை |

ஆ) **நாட்டு வருமானம் முக்கியத்துவத்தை விவரி,**

- தேசிய வருவாய் கணக்கீட்டின் மூலம், பொருளாதாரத்தில் இருக்கும் பல்வேறு துறைகளின் முக்கியத்துவம் பற்றியும் தேசிய வருமானத்தில் அத்துறைகளின் பங்களிப்பு பற்றியும் அறிய முடிகின்றது.
- தேசிய அளவிலான பணவியல் மற்றும் பொதுநிதிக் கொள்கைகளை உருவாக்கவும், பொருளாதாரத்தைச் சரியான பாதையில் இட்டுச் செல்ல கடைபிடிக்க வேண்டிய சரியான வழி முறைகளைக் கையாகவும் தேசிய வருவாய் ஆய்வு உதவுகிறது.
- திட்டமிடுதலுக்கும், திட்டங்களின் விளைவுகளை மதிப்பிடுவதற்கும் நாட்டின் மொத்த வருமானம், உற்பத்தி, சேமிப்பு மற்றும் நுகர்ச்சியின் அளவு ஆகிய புள்ளி விவரங்களை தேசிய வருவாய் கணக்கீடு அளிக்கின்றது.
- குறுகிய கால மற்றும் நீண்ட கால பொருளாதார மாதிரிகளை உருவாக்க தேசிய வருவாய் கணக்கீடு பயன்படுகிறது.
- துறைவாரியானா பொருளாதார விவரங்களையும், ஒரு நாட்டில் வட்டாரங்களின் வருமானத்தை ஒப்பிடவும், மற்ற நாடுகளின் வருமானத்தோடு ஒப்பிடவும், தேசிய வருவாய் விவரங்கள் பயன்படுகின்றன.

42. அ) **நாட்டு வருமானம் கணக்கிடும் முறைகளை விளக்குக.**

தேசிய வருவாயை மூன்று முறைகளை பயன்படுத்தி அளவிடலாம்.

(அ) உற்பத்தி முறை (ஆ) வருமானம் முறை (இ) செலவு முறை

ஆ) **பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி. (Any 5 explain )**

**(i) தேசிய வருவாய்**

**(iii) வாணிபச் சுழற்சி**

**(iv) வறுமை மற்றும் வேலையின்மை**

**(v) பொருளாதார வளர்ச்சி.**


43. அ) **ADF மற்றும் ASP க்கு இடையிலான சமநிலையை வரைபடம் மூலம் விவரி.**

- கீன்ஸின் வேலை வாய்ப்பு கோட்பாட்டில், ADF மற்றும் ASF சமநிலையை விளக்க, குடும்பங்கள் மற்றும் வியாபாரம் ஆகிய இரு துறைகள் எடுத்துக் கொள்ளப்படுகிறது.
- நுகர்வு செலவு தொடர்பான முடிவுகளை குடும்பங்களும், முதலீடு தொடர்பான முடிவுகளை வியாபார நிறுவனங்களும் எடுக்கின்றன.

**கீன்ஸின் கோட்பாட்டில் வருமான சமநிலையை நிர்ணயிக்க இரு அணுகுமுறைகள் பயன்படுத்தப் படுகின்றன.**

www.Padasalai.Net www.TrbTnpsc.com

L தொகுத் தேவை மற்றும் மொத்த அளிப்பு அணுகுமுறை
IL சேமிப்பு மற்றும் முதலீடு அணுகுமுறை




வரைபடம் விளக்கம் தரவேண்டும்

**ஆ) மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதி நிலை உற்பத்தி திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை?**

| வ. எண் | மூலதலத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன் | முதலீட்டின் இறுதி நிலை உற்பத்தித் திறன் |
|---|---|---|
| 1. | இது மூலதனத்தின் அளிப்பு விலையைப் பொறுத்து அமைகிறது. | மூலதனத்தின் தேவையில் ஏற்பட்ட மாற்றங்கள், விலையை தூண்டும் மாற்றத்தைப் பொறுத்து அமைகிறது. |
| 2. | ஆரம்பத்தில் உள்ள மூலதனத்தை கணக்கில் கொக்காமல் ஒவ்வொரு மூலதன அலகிலிருந்து கிடைக்கும் விளைவைக் குறிக்கிறது. | ஆரம்ப மூலதனத்திற்குப் பின்னார் வந்த மூலதனத்தின் விளைவு விகிதத்தைக் காட்டுகிறது. |
| 3. | வரைபடத்தில் படுக்கை மச்சில் மூலதன இருப்பு அளக்கப்படுகிறது | வரைபடத்தில் படுக்கை இச்சில் முதலீடு அளவு ஊகாக்கப்படுகிறது. |
| 4. | இது ஒரு "இருப்பு" கருத்துரு (Stock) | இது ஒரு ஒட்டக் (Flaw) கருத்துரு |
| 5. | ஒவ்வொரு வட்டிவீத அளவிலுமான உத்தம மூலதன இருப்பை இது நிர்ணயிக்கிறது. | கொடுக்கப்பட்ட மூலதன இருப்பில், ஒவ்வொரு வட்டி வீத அளவிலும் நிகர முதலீடு எவ்வளவு என்பதை நிர்ணயிக்கிறது. |

44. அ) **வணிகச் சுழற்ச்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க.**
**வணிகச் சுழற்ச்சியின் கட்டங்கள்**
வரைப்படம் **(i) பூரிப்பு கட்டம் (ii) பின்னிறக்கம் (iii) மந்தம் (iv) மீட்சி**

ஆ) **பெருக்கி இயங்கும் விதத்தினை விவரி.**

- ❖ தேசிய வருமானத்தின் மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதத்தை பெருக்கி என்று வரையறுக்கலாம்.
- ❖ அரசு 100 கோடி பொதுப்பணிக்காக கூலி, இதர பொருட்கள் வாங்குவதற்காக செலவிடகிறது எனக் கொள்வோம். இந்த 7100 கோடி உழைப்பாளர்களுக்கும் பொருட்களை அளித்தவர்களுக்கும் வருமானமாக அமையும்.
- ❖ இங்கு இறுதிநிலை நுகர்வு நாட்டம் 0.8 (30%) எனக் கொண்டால் 780 கோடியை நுகர்வுச்செலவுக்கும், மீதம் 720 கோடியை சேமிக்கவும் செய்வர்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

- இதில் மேற்கண்ட வருமானம் பெற்றவர்களின் இறுதிநிலை நுகர்வு நாட்டம் 0.8 எனில் 780 கோடியில் 764 கோடி நுகர்வுச் செலவுக்கும் மீதம் 716 கோடியை சேமிக்கவும் செய்வர்.

45. அ) **இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்க.**

**இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள்**

பண அதிகார அமைப்பு
காகிதப் பண வெளியீடு
வங்கி உரிமங்கள் வழங்குபவர்
அரசுக்கான வங்கி
வங்கிகளின் வங்கி

**ஆ) உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்குமிடையிலான வேறுபாடுகளை விவாதிக்கவும்.**

| | உள்நாட்டு வாணிகம் | பன்னாட்டு வாணிகம் |
|---|---|---|
| 1. | ஒரு நாட்டிற்குள் மக்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையே நடைபெறும் | பல நாட்டின் மக்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான வாணிகம் |
| 2. | உழைப்பு மற்றும் மூலதனம் ஒரு நாட்டின் பகுதிகளுக்கிடையே தடையில்லாமல் இடம்பெயர்தல். | உழைப்பு மற்றும் மூலதலாம் நாடுகளுக்கிடையே இடம் பெயர்தல் தடைகளுக்குட்பட்டது |
| 3. | பொருட்கள் மற்றும் பணிகள் இடம் பெயர்தலில் தடை ஏதுமில்லை. | பொருட்கள் மற்றும் பணிகள் இடம் பெயர்தலை சுங்கவரி மற்றும் பங்களவு போன்ற தடைகள் கடினமாக்குகின்றன |
| 4. | விற்றல் வாங்கலில் ஒரே ஒரு பணம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது | பல நாட்டு பணங்கள் பயன்படுத்தப்படுகிறது. |
| 5. | புவி அமைப்பு மற்றும் கால நிலை சூழல் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருக்கும்.. | புவி அமைப்பு மற்றும் கால நிலை வேறுபடும் இயல்பு கொண்டவை. |

46. அ) **குறிப்பு எழுதுக (அ) சார்க் (ஆ) ப்ரிக்ஸ்**

**(அ) சார்க்**

- தெற்காசிய நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்புக்காக துவக்கப்பட்ட அமைப்பு தெற்காசிய மண்டல ஒத்துழைப்பு அமைப்பு ஆகும்.
- மற்ற வளரும் நாடுகளுடன் நட்புறவுவை வளர்த்துக் கொள்ளவும் டிசம்பர் 8, 1985 ல் அமைக்கப்பட்டது.
- வங்காளதேசம், பூட்டான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய ஏழு நாடுகள் இதன் உறுப்பு நாடுகளாகும்.
- ஏப்ரல் 2007 – ல் ஆப்கானிஸ்தான் எட்டாவது நாடாக இதில் இணைந்தது.
- நேபாள் தலைநகரம் காட்மண்டு இதன் தலைமைச் செயலகமாகக் கொண்டு ஜனவரி 16, 1987-ல் செயல்பட துவங்கியது

**(ஆ) ப்ரிக்ஸ்**

- வேகமாக வளர்ந்து வரும் நாடுகளின் முதல் எழுத்துக்களைக் கொண்டு குறிப்பிடப்படும் சுருக்கப் பெயர் பிரிக்ஸ் (BRICS) ஆகும்.
- பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகியவையே அந்த ஐந்து விரைவாக வளர்ந்து வரும் நாடுகளாகும்.
- இது 2010 வரை தென் ஆப்பிரிக்காவை உள்ளடக்காமல் பிரிக் என அழைக்கப்பட்டது.

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**ஆ) பணத்தின் பணிகளை விளக்குக,**

பணத்தின் முக்கிய பணிகள் நான்கு நிலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன,

**I. முதல் நிலை பணிகள்**

(I) **பணம் ஓர் பரிவர்த்தனை கருவியாக.**

**(ii) பணம் ஓர் மதிப்பின் அளவுகோலாக**

**II. இரண்டாம் நிலை பணிகள்**

a) **பணம் ஒரு மதிப்பு நிலைக்கலனாக**

b) **பணம் வருங்கால செலுத்துதல்களுக்கானா ஓர் அடிப்படை.**

**III. துணைப்பணிகள்**

- கடனுக்கான அடிப்படை
- பணம் தேசிய வருவாய் பங்கிட்டிற்கு உதவுகிறது.

**IV. இதர பணிகள்**

47. அ) **பன்னாட்டுப் பண நிதியத்தின் நோக்கங்களை விளக்குக,**

- உறுப்பு நாடுகளிடையே பன்னாட்டு பரிவர்த்தனைளயில் பணவியல் ஒத்துழைப்பைப் மேம்படுத்துவது,
- பன்னாட்டு வாணிபம் வேகமாகவும் சமச்சீராகவும் வளர உதவுவது.
- உறுப்பு நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு பண மதிப்பிறக்கம் செய்வதை தடுத்து நாணய மாற்று விகிதம் நிலையாக இருக்கச் செய்தல்
- உறுப்பு நாடுகள் விதிக்கும் செலாவணிக் கட்டுப்பாடுகளை குறைத்தல் அல்லது நீக்குதல்.
- இருதரப்பு வாணிக ஒப்பந்தங்களுக்குப் பதிலாக அனைத்து நாடுகளுக்கிடையிலான பலதரப்பு நடப்பு கணக்கு மற்றும் பண பரிவர்த்தனை முறையை நிறுவுவது.

ஆ) **வேலையின்மைகளின் வகைகளை விவரி,**

வளர்ந்த நாடுகளில் வேலையின்மை என்பது தற்காலிகமாகவோ அல்லது பிறழ்ச்சியாகவோ இருக்கலாம்.

**(i)** **வாணியச் சூழல் வேலையின்மை**

(ii) (II) **பருவகால வேலையின்மை**

(iii) **(iii) தற்காலிக அல்லது உடன்பாடில்லா (பிறழ்ச்சி) வேலையின்மை**

(iv) (iv) **கற்றோர் வேலையின்மை**

(v) **(v) தொழில் நுட்ப வேலையின்மை**

Padasalai.Net